**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2023 - ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 1 - ம் நாள், புதன்கிழமை.

**வ.வி.எண்.3/2022**

**இன்**

**அசல் வழக்கு எண்.3/2016**

மனோன்மணி ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

கோபி ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த உத்தரவானது, 01.02.2023 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. V.H.S. பிரதாப் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. C. ஆர்தர் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த, இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1.** இந்த மனுதாரர்/பிரதிவாதியால், கட்டளை 26 விதி 9 - ன் கீழ், நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** மனுதாரர், அசல் வழக்கில் எதிர்உரிமைக்கோரல் மனு தாக்கல் செய்திருப்பதாகவும், அந்த மனுவில், செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியுள்ளதாகவும், தாவா சொத்தில், அசல்

வழக்கின் வாதி ஆக்கிரமித்து, பாதையை தடுக்கும் வண்ணம் விதானம் கட்டியுள்ளதாகவும், அவ்வாறு, ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளதால், அது குறித்து, இந்த நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தும் வகையில், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3.** பாதை கோரல் வழக்கு என்பதால், வழக்கின் அவசியம் கருதியும், தாவா சொத்தின் இயல்பினை அறியும் நோக்கில், இந்த நீதிமன்றம், வழக்கறிஞர் திரு. G. சுதானந்தா அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கின்றது. வழக்கறிஞர் ஆணையர் ஆணையை பெற்றுக் கொண்டு, வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சார்பு செய்து, தாவா சொத்துக்களை பார்வையிட்டு, பட்டிகை சொத்துக்களை தகுதி பெற்ற கள அளவையருடன் அளந்து, ஆக்கிரமிப்புகளை இனம் கண்டு, தாவா சொத்துக்களை புகைப்படம் எடுத்து, உரிய வரைபடம் தயாரித்து, அறிக்கையுடன் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**4.** வழக்கறிஞர் ஆணையர் கட்டணமாக ரூ.6,000/- நிர்ணயிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் கட்டணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 - ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.
<u>**வரைவு/ சீரான உத்தரவு**</u>
வ.வி.எண்.3/2022
இன்
அசல் வழக்கு எண்.3/2016
தேதி 01.02.2023